நினைக்க      தனக்கு

மருதானை முஸ்லிம் சங்கம்
THE MARADANA MUSLIM ASSOCIATION

# முஸ்லிம் மித்திரன்.

பொதுஜன நன்மைக் குழைக்கும்

**மாதாந்தப் பத்திரிகை.**

Vol. 1 } 1932-ம் ஹூ ஜனவரி—பெப்ரவரி மீ { No. 6

# THE MUSLIM MITHRAN,

## COLOMBO.

To H. S. C. Meamudeen Esq.
16/14 Lee-chm-an Lane
Slave Island
Colombo. CEYLON.

# Maradana Muslim Associati

## மருதானை முஸ்லிம் சங்கம்.

இச்சங்கத்தின் முக்கிய நோக்கங்களாகிறது
இந்த கருமங்களைப் போதிந்ததாயிருக்கும்.

1-வது எங்கள் சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கத்தை "மு
மித்திரன்" என்னும் மாதப் பத்திரிகை வாயிலாய் எல்லா மதத்
ளுக்குமா போதித்தல்.

2-வது **கல்வி.** எங்கள் முஸ்லிம் பெண் பிள்ளைகள் பாட
குப் போகாதவர்களின் வீடுகளுக்கு சகாமாகலாய் பெண் உபா
யர்களை அனுப்பி இலவசமாய்ப் படிப்பூட்டுதல்.

3-வது **பொது நன்மை விஷயம்.** நம் முஸ்லிம் ஏழைகளுக்
குறிக்கும் விஷயங்களுக்கு உதவுதல் அதாவது, பிரசவம், கதன
கம், சுகயீனம், மையத்து இப்பேர்ப்பட்ட விஷயங்களைக் கவனி

4-வது **பிரசங்கம்.** முஸ்லிம் உலமாக்களைக்கொண்டு ஹறி
சங்கம் செய்விப்பது.

5-வது **இராஜிய விஷயம்.** எங்கள் பிரிட்டிஷ் அரசாங்க
ந்து முஸ்லிம்களுக்கு தேவைப்படும் பொது விஷயங்களைத் தக்
சத்துடன் பெற்றுக்கொள்ள முயற்சித்தல்.

மேற்காட்டிய விஷயங்கள் எங்கள் சங்கத்தால் செய்துவர
சித்திருப்பதால் நம் கனதனவான்கள் அவரவர்களால் கூடிய உ
செய்து நம் முஸ்லிம் ஜனங்கள் தற்காலம் படும் கஷ்டங்களை
வரையில் நாம் எல்லோரும் முயற்சித்து உதவி செய்வோமாயி
லோகத்திக்கும் நன்மை செய்தோராய் விடுவோம் என்பது தி

---

# "முஸ்லிம் மித்திரன்."

பொதுஜன நன்மைக்குழைக்கும் ஓர் சிறந்த
மாதப் பத்திரிகை.

Vol. 1. { கொழும்பு. 1932-ம் ௵ ஜனவரி மாதம். } No. 6

## முஸ்லிம்களின் ஒற்றுமையின் முன்னேற்றம்.

**எங்கள்** நாயகம் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் உம்மத்தோர்களாகிய நம் சகோதர முஸ்லிம்கள் அனைவரும் அவர்களால் கூறப்பட்ட சுன்னத்ஜமா அத்தென்ற கூட்டமாகவே யிருக்கவேண்டி, "**மருதானை முஸ்லிம் சங்கம்**" என்ற நாமத்தோடு ஓர்சங்கம்ஸ்தாபித்து அதன் வாயிலாய் முஸ்லிம் சமூக முன்னேற்றத்திற்கான பல வேலைகளைச்செய்ய முன்வந்திருப்பதால் முஸ்லிம் சங்கத்தார்களும் உலமாக்களும் எங்களுக்கு உதவியாய் நின்று உதவும்படி கேட்டுக்கொள்வதோடு, மேலும் எங்கள் சங்கத்தில் நடைபெறும் ஒவ்வொருவிஷயங்களையும், இன்னும் முஸ்லிம் சமூக முன்னேற்றத்திற்கான பல அரிய விஷயங்களையும் எடுத்துப் போதிப்பான்வேண்டி எங்கள் சங்கத்தாரால் "**முஸ்லிம் மித்திரன்**" என்ற நாமத்தோடு, ஓர் மாதப் பத்திரிகை வெளியிடப் படுகின்றது. ஆகையால், அதனை முஸ்லிம்கள் அனைவரும் கூடி ஆதரித்துவரும்படி பணிவாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்

# மாதிஹிவ் ஷிபுதய்ன் கருகறி இமாம் கித்தாபில் கூறுகிறார்கள்.

அல்லாஹுத் தஆலா ஆதம் அலைஹிஸ்ஸலாமைச் சோதித்ததிலே பேசுகிறது.

நிகள்மால் கணக்கைப் பேசி வரும் இமாம்கள் சொல்லுகிறார்கள், ஆதமையும் ஹவ்வாவையும் சொர்க்கத்தில் குடியிருந்து அதிலுள்ள நிஃமத்துடங்கலையும் அனுபவித்துக்கொள்ள ஆமாக்கி கொடுத்து அந்த ஒரு மரத்துக்குமட்டும் மூடுகவேண்டாமென விலகினதை இபுலீசானவன் அறிந்தவுடன் அதைத் தின்னும்படிசெய்ய கலைக்க வேணுமென கருத்துப்பூட்டினான் இன்னம் சொன்னான்: ஆ! எனக்கென்ன கேடு, நான் முன்னூற்றுபது வருடம் சொர்க்கத்தில் அடுக்க இருந்து அவனை வணங்கிடும் என்னைச் சொர்கம் புகுதுவிக்காமல் இந்த ஆதமை மண்ணிற் படைத்து அவரைச் சொர்கத்தில் புகுதுவித்தான். இவரை எந்தவிதத்திலும் சொர்கத்தைவிட்டும் வெளியாக்கவேண்டும் என்று ஹஸது வைத்தான்.

இபுலீஸ் சொர்கத்திற் புகுந்து ஆதமைக்கலைக்கநாடி புகுதப்போனவனை மலாயிக்கத்துகள் தடை செய்தார்கள், அவன் அதனால் வியாகூலமடைந்த மாத்திரம் சொர்கத்திலிருந்து மயிலானது வந்தது. அதைக் கண்டவுடன் அழுதான். என் அழுகிறாய் என்று மயில்கேட்கவும் நீ மிகவும் வடிவுள்ளதாய் இருக்கிறாயே அப்படிக்கொத்த வாழ்வைவிட்டும் அழிந்துபோவையே அதைநினைத்துத்தான் அழுகிறேன் என்றான். மயில் கேட்டதும் நான் அழிந்துபோவேனோ என்றது, இபுலீஸ் சொன்னான் நீமட்டுமல்ல கல்கு அடங்கலும் அழிந்துதான்போகும், என்கிலும், (ஸஜெறதில் குல்த்) தென்றொரு விருட்சம் சொர்கத்தில் நிற்கிறது அதைப் பரிமாறினியாகில் நீடூழி இருப்பாய் என்றான். மயில்சொன்னது அந்த மரம் எனக்குத் தெரியாது என்று சொல்லவும் இபுலீஸ் சொன்னான் என்னை எவ்விதமான ஹிக்மத்தாலும்சொர்கம் புகுதவைப்பாயாகில் நானுனக்கு அறிவிப்பேனென்றான். மயில்சொல்லுவித்தது சொர்கம்புகுதுகிறது றிலுவான் என்கிற மலக்குடைய உத்தாரமில்லாமல் புகுதக்கூடாது என்கிலும் அந்த மலக்குடைய (காதி)மாகிறது பாம்பாய் இருக்கும். பாம்பினுற்தான் காரியம் இருக்கிறது என்று சொல்லவும், மயிலும் பாம்பும் இபுலீசை உண்மையாக்கி நாமெல்லாம் நீடூழிவாழலாமென்றெண்ணிக் கொண்டார்கள். பாம்பு இபுலீசிடம் நாம் எவ்வித முன்னைச் சுமப்பேன் என்றது. நான் காற்றாகப் புரண்டு உன் வாயிற்புகுந்துகொள்ளுவேன் என்று சொல்லவும் சம்மதித்து அவ்விதமே கொண்டுபோய் பாம்புக்கும் மயிலுக்கும் ஆதமை விலக்கப்பட்ட மரத்தை அறிவித்தான்.



பின்பு இபுலீஸ் வந்து ஆதம் ஹவ்வாவிடம் நின்று ஊளையிட்டழுதான். இருவரும் நீ என் அழுகிறாய் என்றபோது உங்களை அல்லாஹுத் தஆலா இத்தனை நிஃமத்தில் வைத்திருக்கிறானல்லவா அது நீங்கள் சிலநாட் சென்று மவுத்தாய் விடுவீர்கள் அதனால் இந்த வாழ்வு போய்விடுமே என் அதான் அழுகிறேனென்று சொல்லி மறைந்துபோய் விட்டான். அதனால் இருவரும் துக்கித்து வெப்ராசாமுடையவர்களாய் இருவருடைய சிந்தையிலும் அவன்சொன்னது பிடித்திருந்தது. பின்பு இபுலீஸ் வந்து நீங்கள் துக்கமடையவேண்டாம் அதற்கொரு தந்திரம் சொல்லுகிறேன் அதாவது, அல்லாஹுத் தஆலா உங்களை அந்த மரத்தை முடுகவேண்டாமென விலக்கினதெல்லாம் நீங்கள் நீடூழியிருந்திடுவீர்கள், அதைத்தின்றீர்களாகில் என்றதற்கல்லாது வேறில்லை என்றான், அதின்பேரில் அல்லாவைக்கொண்டு பிரமாணம்செய்து உபதேசிகளில் நின்றும் தானுமிருக்கிறதாயும் மருட்டிவிட்டான். அந்தச்-சொல்லை இருவரும் ஒப்பி ஹவ்வா உம்மா தின்று ஆதமை ஹவ்வா கலைத்து தின்னும்படிச் செய்துவிட்டார்கள்.

## முஹம்மதிபுனு இஸ்ஹாக் பேசிவந்தார்கள்.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அதை தன் சுயபுத்தியினுற்பரிமாறவில்லை என்கிலும், ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு கள்ளைக் குடிப்பிவித்து நினைவுமயக்கித் தின்றார் என்றும் குர்ஆனில் அல்லாஹுத் தஆலாசொல்லுகிறான் சொர்கத்து கள்ளில் லாகிரியில்லையென்று திருவுளமானதுக்கு இந்த நிவாயத்து மாற்றமாகுது என்கிலும், அதை பிற்காலமுண்டாகும் கள்ளரிலென்றுசொல்லுவதுக்கிடமாகுது.

## இபுருஹீம்இபுனு அதும் (றலி) சொன்னார்கள்.

அந்தத் தீனுனது நீளமான சஞ்சலத்தை வருத்திவிட்டது என்று.

**அல்லாஹுத் தஆலா**
குர்ஆனில் சொல்லுகிறான்.

குற்றஞ் செய்தவருக்குத் தெண்டனையால் போதுமாயிருக்கும் அவர் வெட்கப்பட்டு ஒழிப்பதென்று சொல்லப்பட்டு இருக்கிறது.

## ஷிபுலி றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள்.

நம்முடைய தகப்பனாகிய ஆதம் ஒரு பிடி கோதம்புக்கு இச்சைப்பட்டதால் முடிவற்றவாழ்வை விட்டார். அப்படிக்கொத்த ஆதமின் மக்கள் தங்களில் சொற்ப இச்சையால் கணக்கில்லாத கவனத்தை வருத்துவதுடன் அழிவில்லாதவாழ்வையும்இழந்துவிடுவதேபுதுமை என்றார்.

**ஆதம்** அலைஹிஸ்ஸலாமை அச்சொற்பத் தீனினால் பத்துமுஷீபத்தைக்கொண்டு சோதனைசெய்தான் (1) வது ஆண்டவன் திருவுளம்பற்றினான் நான் உங்கள் இருவரையும் அந்த மரத்தைவிட்டும் விலக்கவில்லையாவென வம்பித்தான். (2) வது அவரை விட்டும் சொர்க்கத்தின் உடுமானத்தை உரியப்பட்டு விரண்டோடும்போது அல்லாஹுத்தஆலா கேட்டான் ஆதமே என்னை விட்டும் விரழுகிறீரோவென்றதற்கு, ராயனே வெட்கித்தோடுகிறேன் என்றார். அப்போது அவர் முன்னெற்றி ரோமத்தை கோவன்கொடிபற்றி இழுத்துக்கொண்டது. இருவருடைய அங்கங்களை மறைப்பதற்காக, மரங்களுடைய குலைகளைப்பறித்து மறைத்துக்கொள்ள காடில் மரம் இடங்கொடுக்கவில்லை என்கிலும் (அத்தி)மரமட்டும் இடங்கொடுத்தது அதன் குலைகளால் மறைத்தார்கள். அதற்காக அது றஹ்மத்துடைய மரமென்று சொல்லப்பட்டது அதன் சிறப்புக்காகத்தான். **அல்லாஹுத்தஆலா** குர்ஆனில் அதைக்கொண்டு பிரமாணித்து (ஒத்தீனி) சூரத்தில் (இன்ஸான்) ஸெவ்வொருகலான சூரத்தில் அமைத்து பின் கீழானவர்களில் கீழானதளவில் ஆக்கினேன் என்றான், அத்திமரம் வருடத்தில் இரண்டுமுறை காய்க்கின்றது. அதின்பழத்தில் கொட்டைகிடையாது அதின் வெளியங்கமும் உள்ளங்கமும் பிரயோசன முள்ளதாகவே இருக்கும். (3)றும் முஷீபத்தாகிறது அவர்களிருவருடைய மேனியும் வெண்மையாகவும் ஒளிவாகவும் மிகுந்த திறமானதாகவும் இருந்ததை இருளாகவும் மிகு அட்பமானதாகவும் ஆக்கினான், அவர் நகங்களை மட்டும் பழைய விதம் போல் வைத்ததெல்லாம் முன்னிருந்த மாதிரியை கண்ணுற்றுப்பார்த்து கவனமடையவும் அதனால் சரீரத்தின் அரிப்பை மாற்றி சொறிந்து கொள்ளவும்.

(4) வது அல்லாவுடைய சமுகத்தினின்றும் ஒரு சத்தமுண்டாச்சுது எனக்கு மாற்றஞ்செய்தபேர் என் அசலில் இருக்கவேண்டாம் என்று. இன்னும் ஆண்டவன் குர்ஆனில் திருவுளம் செய்கின்றான் நீங்களும் நீங்கள்பொதிந்திருக்கும் பிச்சனமும் இபுலீஸும் மயிலும் பாம்பும் பூமியளவில் இறங்கிவிடுங்கள் என்று சத்தமுண்டாச்சுது.



## கஹ்புல் அஹ்பாரும் மற்றவர்களும் பேசிவந்தார்கள்.

பாம்பை (இஸ்பஹான்) அல்லது ஷஜிஸ்தான் என்கிற ஊரிலும், இபுலீஸை ஜித்தாவிலும், மயிலை காபுல் என்கிற ஊரிலும் ஹவ்வாவை அரபாத்திலும், ஆதம் அலைஹிஸ்ஸலாமை சரந்தீவு மலையிலும் இறக்கப்பட்டது அந்த உச்சத்தில் ஒற்றைக்கால் பொருப்பாய் நின்று தாம் செய்த தோஷத்தையெண்ணி நாற்பதுவருடம் அழுதாரென்றும் இன்னும் எந்நாளும் அவர் பாதம் பதிந்ததை கழுகினதற்காக நித்தமும் மழையை மேகமில்லாமல் வருஷிக்கப்படுமென்றும் அதின் சருகில் ஒரு ஆறு ஓடிக்கொண்டே இருக்கிறதென்றும், அதில் மாணிக்கம் விளைகிறது என்றும்;

ஐந்தாவது, ஆதமும் ஹவ்வாவும் ஒருவர்க்கொருவர் காணாமல் நூறு வருடகாலம் ஆதம் ஹிந்துப்பூமியிலும் ஹவ்வா ஜித்தாவிலும் பிரிந்தவராயிருந்து பின்பு (ஜம்உ) என்றுபேர்சொல்லப்பட்ட (முஸ்)தலிபாவில் கூடி அரபாத் என்னும் தானத்தில் ஒருவரை யொருவர் அறிந்துகொண்டார்கள்.

ஆறாவது இவர்களில் ஒருவர்க்கொருவர் பகையாகவே இருக்கின்றது.

ஏழாவது ஆதமைப் பாவியாகிப் போனாரென்று சகலருடைய நாவிலும் நடத்தினான்.

## ஆண்டவன் குர்ஆனில் திருவுளம் செய்கிறான்,

ஆதம் தன்னுடைய றப்புக்கு மாறுசெய்தார். எட்டாவது ஆதமுடைய வமிசத்தார் பேரில் பகையாக இபுலீசைசாட்டி அவன்பகையாலும் கலைவாலும் மிகுத்தவர்களும் நரகம் அடைகிறார்கள்.

ஒன்பதாவது துன்யாவை அவருடைய மக்களுக்குச் சிறைச்சாலையாக்கி அதைச் சம்பாரிப்பதாலேயே ஆஹிறத்தை மறந்தவர்களாகவும்,ஒருவர்க்கொருவர் கொலை செய்கிறவர்களாகவும், கடல்திடல் காடுமேடு கூதல் காந்தி இதுகளிலெல்லாம்அலைந்துதிரிந்தும்தங்கள் நாட்டப்படி பெற்றுக் கொள்ளாதவர்களாகவே காணப்படுகின்றது.

பத்தாவது மிகுத்தவர்கள் பேரிலும் மூதேவித்தனத்தானே முந்த இருக்கிறது. அல்லாஹுத்தஆலா அதைவிட்டும் நம் அனைவரையும் காப்பானாகவும்.

ஹவ்வா உம்மாவை இந்தப் பத்து காரியம்கொண்டும் அவரையும் அவர் பெண்மக்களையும் வேறே பதினைந்து முஷீபத்துகொண்டும் சோதித்தான்.

அந்த ஸஜறத்துல் ஹால்லதை காயப்படுத்தின வேபுபால் மாசார்திரம் அவர்கள் சரீரத்தில் இரத்த மோடிவருகின்ற (ஹய்லே) விதித்தான். 2-வது கர்ப்பமுண்டாகிற சுமையை சுமத்தினன்.

3-வது பேறுடைய வருத்தத்தையும் கருமாரியின் வருத்தத்தையும் சுமத்தினன்.

4-வது, அவர்களுடைய தீன் குறைத்தலாய் இருக்கிறது.

5-வது. அக்கில் குறைத்தலாய் இருக்கிறது

6-வது அனந்திரத்தில் ஆண் பிள்ளையுடையபேரில் பாதி கிடைக்கிறது.

7-வது இத்தாவில் இருக்கிறது.

8-வது. ஆண் பிள்ளைகளுடைய கையில் தாளால் இருக்கிறது.

9 வது தலாக்கு அவர்கள் வசம் இல்லாது இருக்கிறது.

10-வது பீஸபீல் என்னும் நற்பேர் குறைந்திருக்கிறது

11-வது அவர்கள்நபியே கிடையாது.

12-வது அவர்களில் கல்த்தான்தனத்துக்கு யோக்கியதையில்லாதிருக்கிறது.

13-வது தனிவழி போகிறது ஹறாமாயிருக்கிறது.

14-வது. அவர்களைக் கொண்டு ஜும்ஆ நிறைவேறாதிருக்கிறது.

15-வது. அவர்கள் ஆண்பிள்ளைகளுக்கு இமாம் செய்யக்கூடாது.

இபுலீஸ் ஷைத்தானத்துல்லானை பத்து காரியம் கொண்டு பலாயில் ஆக்கினன்:-

1-வது வானத்துக்கும் பூமிக்கும் அரசனாயிருந்ததை நீக்கினன்.

2-வது அவனை பூமியனவில் எடுத்து எறியப்பட்டது.

3 வது அவன் சூறத்தை மாற்றி செய்த்தானென பேரிட்டது.

4 வது அஸ்ஸாசீல் என்னும் பெயரை மாற்றி இபுலீஸ் என்கிற பேரிட்டது.

5 வது மூதேவிகள் எல்லோருக்கும் முன்னிலையானவனுக்கினது.

6-வது சுபினை விட்டும் ஒழிந்தவனுக்கினது.

7-வது மல்ஊனுக்கினது

8-வது ஷாகிதீன்களுடைய திக்றினால் அவன் முஸீபத்தடைகிறது.

9-வது சகலாதியட்டங்களுக்கும் அவன் முன்னிலையானவனாகவும் கதீபு ஆகவும் இருக்கிறது.

10-வது என்னேரமும் தொழுகிறவர்களைக் கண்டு தன் தலையில் மண்ணைவாரி போடுகிறது.

பாம்பை அஞ்சு காரியங்களில் கொண்டு பலாயிலாக்கினன் முன்னிருந்த அழகையும் நடையையுங் குறைத்து வயிற்றால் நடக்கத்தக்கதாகவும் மாறிகாலத்தில் வருஷத்தில் ஒரு விடுத்தம் செத்துபிழைக்கிறதாகவும் ஆதமுடைய மக்கள்



எவ்விடத்தில் கண்டாலும் அதை கொல்லுகிறதாகவுமாயிருக்கும்.

**காமாலுத்தபீறி சொன்னார்:—** மயிலும் பாம்பும் இவையிரண்டும் இபுலீஸை சொர்க்கத்தில் நுழையவும் ஆதம் சொர்க்கம் இழக்கவும் இருந்தபடியால் அது ஒன்றுக்கொன்று பகையாகவும் மயில் எவ்வளவு வடிவுள்ளதாய் இருந்தாலும் மனிதரைவிட்டும் காணகமேமருகி இருக்கிறது.—தொடரும்

---


# முஸ்லிம் மித்திரன்

ஹிஜ்ரி 1350 றமளான் மதி


## முஸ்லிம்களும் அநாசாரச் செயல்களும்.

பொதுவாக உலகத்தில் ஆண்டவனால் சிருஷ்டிக்கப்பட்ட மானிட சமூகத்தினர்களுள் பலவேறு மதப்பிரிவினர்களாயும், பலவேறு கொள்கைகளை யனுஷ்டிப்பவர்களாயும் காணப்படுகின்றனர். ஆனால் கணக்கிடற்கரிதாகிய எத்தனையோ மதஸ்தர்கள் வெளிக்கிளம்பியிருப்பினும், வல்லோனருளால், இப்பூவுலகின்கண் எமது எம்பெருமானார் நபி (சல்) அவர்கள் நிலைநாட்டிய (தீனுல் இஸ்லாம்) என்னும் பரிசுத்த மார்க்கத்தைப்போல் எம்மதமுங் கிடையாதென்பது உண்மை. இத்தகைய சன்மார்க்கத்தில் உண்மை கொண்டுள்ளோராகிய நம்மனோர் அனைவரும் மார்க்கநெறி வழுவாது நடந்துகொள்ளவேண்டுமென்பதே, அத்யாவசியம். இஃதில்வாறாயினும் நம் முஸ்லிம் ஆண் பெண் இரு திறத்தினர்களிற் சிலர் இஸ்லாத்தின்மூல அனுஷ்டானக் கொள்கைகளை நன்குணர்ந்து நடவாமல், மனதிற்கேற்ற வழி கேடான செயல்களுள் ஈடுபட்டு வருவதைக் காண எமக்கு அளவுகடந்த துக்கமே விளைகின்றது. இஸ்லாம் மதத்தை புவியில் யாவராலும் எத்தினத்திலும் அசைக்க முடியாதவாறு பலப்படுத்த எத்தகைய அரும் பிரயாசப்பட்டனர்.

நம் நபிகள் நாயகம் (ஸல்) இவ்வளவு அழுத்தமாக மதத்தை நிலைநாட்டியிராவிடில், அன்று முதல் இன்றுவரை தோன்றிய விஷமிகளால், எத்தகைய அதீனதிசையடைந்திருக்குமென்பது சொல்லாமலே விளங்கும். ஆனால், "உள்ளாள் இல்லாமல்ஊராழியாது" என்பதுபோல நம்மதத்திற்குள்ளேயே சிற்சில போலிகள் தோன்றி மதத்தின் சீரையும் சிறப்பையும் குன்றச் செய்வதுமன்றி முடிவில் தீராப்பழிக்கும் ஆராத் துயரத்திற்கும் ஆளாகி படுகரதடைகின்றனர்.

சாதாரணமாய், நம்மனோரிற் சிலர் ஒழிந்த பெரும்பாலோர்,

சமான் இஸ்லாம் என்பதென்னை
யென்று ஒரு சிறிதும் அறிந்திரு
க்கின்றார்களில்லை. ஆனால் இவை
யிரண்டும் அடியோடு அழியத்தக்க
எத்தனையோ அநாசாரச் செயல்க
ளுள் ஈடுபட்டு வருவது மட்டும்
பிரத்தியட்சம் இஸ்லாத்தின் ஊக்
கம்,கல்வியொழுக்கம் முதலியவை
மேலோங்கி வந்த தினமெல்லாம்
போய், முடிவிற் மதநெறியற்ற சில
முஸ்லிம்களாலேயே இவையனைத்
தும் தவிடுபொடிகளாய்ப்போயின
ஒரு சிலர் நம்மத அனுஷ்டானக்
கொள்கைகளைக் கிஞ்சிற்றும் அறி
யாமல் பிறரையும், பிற மதங்களை
யும் நிந்தித்து வீணில் தமக்கும்
தம் மதத்திற்கும் ஓர் கேவலத்தை
யுண்டுபண்ணிவிடுகின்றனர். நம்
மனோரிற் சிலர் செய்யும் அட்டூழி
யங்களாலும், அநியாயத்தினாலும்
என் நம்மதச் சீரும் சிறப்பும் குன்
றாமலிருக்காது? தெய்வபக்தி, சத்
தியம் , சாத்விகம், காருண்யம்,
பொறுமை, தயாளம் இவைபோ
ன்றன இன்னும் அனேகம் இம்
மதத்தில் நிரம்பியிருக்க முடிவில்
மதத்தில் பொய்பக்தி, முரட்டுத்
தனம், முன் கோபம், முதலிய
கொடுங்குணங்களை ஒருங்கேயமை
யப்பெற்ற சிற்சில போலி முஸ்
லிம்களாலேயே, முன் சொன்ன'
நற்குணமனைத்தும் மறைந்திடத்
கின்றன. தம்மதவழி தவறி பிற
மத அனுஷ்டானங்களிலேயே,
சதா ஈடுபட்டு வருவோர் பேரு
க்கு மட்டும் முஸ்லிமெனப் பட்
டப்பேர் கொண்டென் ? கொள்
ளாவிடிலென் ?

### " தோன்றிற் புகழொடு தோன்றுக. "

என்னும் முதுரைக் கிணங்க
உலகத்தில், ஏனைய மதங்களைக் கா
ட்டிலும் நமதிஸ்லாம்மதம் ஒன்று
மட்டுமே என்றென்றும் அழியாப்
புகழில் தழைத்தோங்கி வந்துகொ
ண்டிருக்க, இத்தன்மையாய் புகழ்
தனை இகழ்ந்துகூறி எவ்விதத்தில்
இம்மதச் சீருஞ்சிறப்பும் குறைக்க
லாமெனக் கெட்டெண்ணமும் து
வேஷபுத்தியும். மதப் பொறுமை
யுங் கொண்டுள்ள கலப்பரியர்கள்,
'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடி
க்குக் கொண்டாட்டம்'' என்பது
போல். முஸ்லிம்களுள் சிலரால்
மதப்பிரிவும் கட்சிப் பிரதி கட்சி
யும், ஆபாசச் செயல்களும் நிகழ்
ந்துகொண் டிருப்பதையும் காண
அளவிடமுடியாத ஆனந்தக்கூத்தா
டுவரென்பதிலென் சந்தேகம் ?

ஒருவன் எந்த சாதியானுயிருப்
பினும் ஏதாகிலுமோர் சிறிய குற்
றம் செய்துவிட்டால் அவனை சாத்
விக வழியிற் சமாதானப்படுத்தவே
ணுமேயன்றி தன் முழு வல்லமை
யைக்கொண்டு அவன்மீது சற்றும்
போர்புரிதல் கூடாது, அவ்வாறு
போர்புரிவோர் இராக்ஷச குணத்
திற்கும். (இஸ்லாம்)என்னும் சாந்
தகுணத்தைக் கைவிட்ட ஏர்ந்த



குணத்திற்கும் கட்டுப்பட்டவரெ
ன்று பகிரங்கமாகவே கூறலாம்.
இஸ்லாம் மார்க்கத்தை யனுட்டிக்
கும் முஸ்லிம்கள் ஆதிமுதல் சாத்
விகத் தன்மையையே கடைப்பிடி
த்தொழுகவேண்டியிருக்க, தற்போ
ழ்தோ அதற்கு மாறான முரட்டுக்
குணத்தையே சில போலிகள் கை
யாண்டு வருகின்றனர். இவ்வாறு
செய்வனவற்றால் நமக்கும் தம்மத
த்திற்கும் அழியாப் பழிப்பும் ஒழி
யா நிந்திப்பும் சம்பவிக்கின்றதல்
லவா ? **சாந்தம்** என்னும் அடிப்ப
டையான கொள்கையின் மேல்
இம்மதம் வீற்றிருக்க, வீணில் என்
முரட்டுத்தனத்தாலும் குரூரபுத்தி
யாலும் அடாதசெய்கைகளை அஞ்
சாமற் செய்யும் பேதையர்களென்
நாமம் தரித்தல் வேண்டும் ? நம்
மதம் தெய்வபக்தி, கல்வி, ஒழுக்க
முதலியவைகளி லீடுபட்டு முன்
னேற்றமாவதற்கு நம்மனோர்களே
காரணமன்றி ஏனையோர் எங்ஙனம்
காரணராவர் ? மதக்கல்வி கிஞ்சிற்
றுமில்லா வோர் முஸ்லிமானவனு
க்கு பிறமதஸ்தன் தன் மதக்கொள்
கைகளை எவ்வளவோ எடுத்தோதி
னாலும், தப்பெனவும் சரியெனவு
மாராய்ந்தறியும் தன்மையற்ற இவ
னக்கோ முற்றும் உண்மையென
த்தோன்றுவதுமன்றிநாளடைவில்
மார்க்க பக்தியும் குன்றியோடத்
தலைப்பட்டு விடுகின்றது. 'ஒருசிலர்
அன்னியரின் நிந்திப்புக்கு அஞ்சி
தம்முடைய மார்க்கக் கொள்கை
களை முற்றும் விட்டுக்கொடுக்கின்
றனர். மதத்தில் பரிபூரண நம்பிக்
கைகொண்டுள்ள எம் முஸ்லிம்
இவ்வாறு விட்டுக்கொடுக்க மனத்
துணிவுகொள்ளவே மாட்டான் !
இக்காலத்தில் நம்மனோரில் எவ
ராவது ஒருவர் மார்க்கத்தைப்பற்
றியவரை பிரசாரம்செய்யப்புகின்.
அவர்மீது பெரும்பாலும் சிலரு
க்குக் குற்றம் புலனாகின்றதேயன்
றி குணம் புலனாவதில்லை, ( பிரச
ரம் செய்பவர் எத்தகைய செயல்
களைக் கைக்கொண்டவராயிருப்பி
னும் நமக்கு லக்ஷியமில்லை. அவர்
எடுத்தோதும் நல் விஷயங்களே
பெரிதன்றி, நிந்திப்பதினாலென்
பயன் விளையும் ?

(தொடரும்.)

இன்னும் இக்காலத்தில் நம்மத
த்தில் சில பெண்மடர்கள் நாகரீக
உலகத்தைக்கண்டோர்களான பத
ம்பாடித்திரியும் மாதர்களின் செய்
கைகளைக் கண்டு நமது ஆதி பிதா
ஆதம் (அலைஹி)அவர்களின் மனை
வியார் ஹவ்வா (அலைஹி) அவர்க
ளின் சொல்லைக் கேட்டு நீடூழிவா
ழக்கூடிய உலகத்தைவிட் டகலச்
செய்த நாகரீகத்தைப்பற்றி முன்
பக்கத்தில் வரைந்திருக்கின்றேன்.

---

## செததகதல் காஹிறி அறிவைப்பற்றி கூறுகிறார்கள்.

இல்மு படிக்கிறது பற்லுஅய்ன் பற்லு கிபாயா, (மந்தூபுமுபாகு) மக்ருஹாஹூஹறும், ஆக ஒரு அஹ்காங்கள் உண்டாக்கி இருக்கின்றது.

### 1-வது பற்லு அய்ன்

அதில் மூன்று வகை உண்டாகி இருக்குது. 1-வது இல் முத்தவ்ஹித்,அதாகிறது அக்குத்தாலா வை அஸ்மாசிபாத்தின் பாதையின்படி அறிந்து ஓர்மை படுத்துகிறது.

2-வது இல்மு சித்றி:- அதாகிறது நப்ஸுடன் பீஸபீல் செய்கிறது. சகலதையும் ஆண்டவன் அளவில் பாரம் சாட்டுகிறது. அவனின் செயலுக்கு பொருந்துகிறது அவனின் அந்தரங்கங்களை தெரிசிக்கிறது. இதுபோல் கொத்தது களை எடுத்து பெருமை, அகன் பெருமை, அவாநப்சு, ரியாசத்து, மொகத்தாச்சினை, இது போல் கொத்ததுகளை தவிழ்கிறது.

3-வது இல்மு ( சரியா ) அதாகிறது; தொழுகை, ஸக்காத்து, நோன்பு,, ஹஜ்ஜி, இதின் ஹூக் குமுகளையும் ஹறும், ஹலாலையும் அறிகிறது.

ஆனல் இதில் ஸக்காத்து, ஹஜ்ஜி கச்சவடம், ( நிக்காஹூ ) கலியாணம் ( ஜிஹாது ) சண்டை செய்கிறது. இதுபோல் கொத்துக்கு தத்துவமுடையவனய் இருந்தால் அதின் அஹமியங்களை அறிகிறது பற்லு அய்ன்.

இனி இரண்டாவது (பற்லு கிபாயா,) அதாகிறது. இல்மு சரியத்தில் நின்றும் சில நேரம் தேள்வையாகிறத்தை அறிகிறதும் இல்முசிற்றில் மிகுதமாக கடல் போலே படிக்கிறதும். இனி மூன்றுவது. ( மந்தூப் ) அதாகிறது தொழுகைக்காக வொக்குத்து அறிகிற ஹத்து மட்டிலும்கிப்புலாவை அறிகிற ஹத்து மட்டிலும் ஜூமின் இல்உம படிக்கிறதும் நசலுக்கு மருந்து செய்ய இல்முத்திப் பென்னும் வைத்தியம் படிக்கிறதும்.

இனி 4-வது. ( முபாறஹூ, அதாகிறது. (நஹ்வு, சர்பு) படிக்கிறது இதுக்கு இல்மு. முஹ்தரமென்னும் சங்கையாக்கப்பட்ட இல்மு, இதுகளை முபாகு தானே என்று வைத்துக்கொண்டு ( இல் திங்ஜா) முதலானது செய்கிறது. ஜாய்ஸ் அல்லே.

இனி 5-வது ( மக்ருஹூ ) அதாகிறது வீணுபுள்ள பைத்துகள் பாடல்கள் பாடுகிறதும் படிக்கிறதும்.



இனி 6 வது ( ஹறும் ) அதாகிறது இல்முல் பலாசிபா, இல்முல் ( முஷஹ்பதாஹ் ) இல்முல் ( முஷல்கா ) இல்முல் ( றமல் ) இல்முல் ( ஹந்தஸ்த் ) இல்முல் ( நஜூமில் ) மிகுதம் இல்முல் [ஹூறாப்] இல்முல்[ஸஹற்] இல்முல், தபாய் இல்முல் ஜச்பற்ஹ, இல்முல் [தலாவிம்] இல்முல் (மன்திக்) இதுபோல் கொத்ததை படிக்கக்கூடாது, ஆனல் இல்முல் மந்திக்கு, ஷறுக்கு விரோதம் வருத்தாதபோனலும் அதில் முக்கியமாய் இருந்தால் பலாசிபாவின் இல்மனவில் இழுத்துவிடும். ஹறும்வந்துசம் பனிக்குமென்று ஹறும் என்றது எந்த இல்முகள் உண்டானது. ஒரு மார்க்கம்சறஹ்ற கொண்டல்லே அவர்அவர்களின் யோசினையால் உண்டாக்கி கால்சரிகி போனர்கள். இவர்களின் வரலாத்தை அறிந்து நாம் தவிழ்ந்துகொள்ள வேண்டியது, அவர்களின் வரலாத்தை சுருக்கமாக சொல்லப்படுகுது ஆனதால் அறிந்து, நம்முடைய யோசினை. புத்தி பிரகாரம் யாதொன்றும் சொல்லாமல் சறயின் பிரகாரம் நடக்கும்படி றஹ்மான் கிருபை செய்வானகவும்.

ஆமீன்

---

## சில அரிய உபதேசங்கள்.

1-வது அடிபணிந்து தாழ்மையுடன் நடந்து கொள்வது மகாப்பெரிய, துரோகியையும் துஷ்டனையும் உருகும்படி செய்துவிடும்,

2-வது நேத்திரங்களையும் புத்தி [தூனை] யையும் மற்றெல்லா உருப்புகளை காட்டிலும் அதிக ஜாக்கிரதையாக கவனித்துக்கொள்ளுங்கள்,

3-வது அளவற்ற கவலையின்போதும், சினத்தின்போதும், புத்தியின் நிதானமும் பெருமையும் போய், விடுகின்றன,

4-வது நீங்கள் ஆழ்ந்து சிந்திக்காதவரை எதற்கும் நல்லதென்றே கெட்டதென்றே முடிவு சொல்லாதீர்கள்.

5-வது தனக்கு சிறியவர்களுக்கு மரியாதை செய்வது தன்னுடைய கவுருவத்தையே அதிகப்படுத்துவதாகும்.

6-வது இடத்துக்கும் சமயத்துக்கும் தக்கவாறு வார்த்தையை சொல்ல வேண்டும்.

7-வது நல்லோர்களுக்கு உதவி செய்வது தனக்கு செய்துகொள்வதைவிட மிகவும் மேலானதாகும்

8-வது தன்னைவிட மேலான அறிவில் சிறந்தவர்களை சினேகித்திருப்பதே நன்மையானதாகும்.

9-வது அருத்தமற்ற வார்த்தைகளை சொல்லிக்கொண்டு இருப்பதைவிட மௌனமாய் இருப்பது மேலாகும் இதனால் தன் கவுருவமும் மரியாதையும் தன்னிடமிருக்கும்.

10-வது இரகசிய எண்ணம், பூர்த்தியாவதற்கு முன் யாரிடமும் சொல்லாதே, ஆனால் அதற்குவேண்டிய உதவியைத் தேடிக்கொள்.

11-வது பேராசையே எல்லா இழிவுக்கும் அடிவேறாயிருக்கின்றது.

12-வது (அல்லாவுக்கு) அஞ்சுபவன் எவ்வித தீமையும் செய்யான்.

13-வது தாழ்மையும் வணக்கமும் அநேக குறைபாடுகளை மறைத்துவிடுகின்றன.

14-வது தன் சமுகத்தாரையும் தன் தேசத்தையும் ஆதரிப்பது இதர எல்லா குடைகளைக் காணவும் மேலானதாகும்.

15-வது உலகத்தில் காணப்படும் மார்க்கத்தினாலும், நாகரீகத்தாலும் லௌகீகத்தாலும், தேசியத்தாலும், எத்தனை பாவங்கள் உண்டாகின்றனவோ அவை எல்லாவற்றிற்கும் தானென்னும் அகங்காரப் பெருமையே அசல் காரணமாய் இருக்கின்றது. பெருமையும், நயவஞ்சகமும், பகைமையும் போதகமும், கொலையும், கொள்ளையும், இவை யனைத்தும் பெருமையினால் விளையும் பயன்களேயாம்.

## கல்வத்து நாயகம் கித்தாபில் கூறுகிறார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் உலமாவு துன்யாவுடைய வர்ணிப்பில் அநேகமாக சொல்லியிருப்பதுடன் அவர்களுக்குப்பின் ஸஹாபாக்களுடைய யானையில் தனே (ஹஸதை)யுடையவர்கள் ஆகிறத்துடைய உலமாக்களாகிய மகாபாரவான்கள்பேரில் குத்துப்பாடு சொல்ல தொடுத்துவிட்டார்கள். முதலாவது தப்சீருடைய உலமாக்களுக்கெல்லாம் நாயகமாகிய செய்தனா இபுனு அப்பாஸ் றலியல்லாகு அன்கு அவர்கள் குறானுக்கு தப்சீர்செய்ததை (நாபி உபுனுல் அஸ்றக்கு என்பவர் குத்துப்பாடு சொல்வதும் குறானுக்கு மனம்போல் தப்சீர் செய்கிறார் என்று மிகுத்த நேசவினையெல்லாம் செய்கிறவராக இருந்தார். இன்னமும் (அப்துல்லா இபுனு உமரையும்] [அப்துல்லா இபுனு ஸுபைரையும்] சொர்க்கங்கொண்டு நல்மாராயம் பெற்ற சஹது றெலியல்லாகு அன்கு இவர்கள் போல் ஒத்தவர்களுடைய இல்மிலும், தொழுகை முதலாகிய இபாதத்துகளிலும் சிலர்கள் எல்லாம் குத்துப்பாடு பேசுகிறவர்களாக இருந்தார்கள்.



## செய்குல் அக்பர் றலியல்லாகு அன்கு

புதுஹாத்துல் மக்கியாவென்னும் கித்தாபில் அவர்களை கணக்கில்லாத புகழ்ச்சியாய் புகழ்ந்து பின் சொல்லுகிறார்கள் ஒருபோது நானும் அப்தாக்களில் ஒருவரும் காப் மலைக்கு போய் இருக்கும்போது அம்மலையை சூழ்ந்துகொண்டு இருக்கிற நாகத்துக்கு அருகே நாங்கள் போகையில் நம்முடைய கூட்டாளி என்னைப்பார்த்து இந்த சர்ப்பத்தின் பேரில் ஸலாம் சொல்லுமென்றார். அது போல் ஸலாம் சொன்னவுடன், பாம்பானது உடனே (ஜவாபு) சொல்லி நீங்கள் எந்த தேசம் என்று கேட்டது. நாங்கள் (பஷாயா) வென்னும் நகரத்திலுள்ளவர்களென்றவுடன் அந்தப் பட்டணத்தையுடையவர்களுடன் செய்கு அபிமதியனுடைய, நடைபிடி எவ்விதமாக இருக்கு என்று கேட்டபோது, அப்போது அவரை அவ்வூரையுடையவர்கள் (ஷிந்தீக்) கென்று சொல்லுகிறார்களென்று சொன்னோம். உடனே ஆபுதுலைம ஆதமுடைய மக்களுடைய மடத்தனமே மிகவும் ஆச்சரியம் அல்லாகுத் தஆலா அவன் அடிமைகளில் ஒருவரை ஒளியாக நிறுத்தி அப்பால் அவனுடைய (கல்கு களில் ஒருவராவது பொருத்தக்கெடுவர்களென்று அல்லாவின் பேரில் ஆணையாக நான் எண்ணியே இருக்கவில்லை என்று, அறவமானது, நாகரீகமாய் சொன்னவுடன் அவரை உனக்கு எப்படித்தெரியுமென்று நாங்கள் கேட்டோம் உடனே, (சுப்ஹானல்லா! பூலோகத்தில் அவரை அறியாத ஊர் வினை உண்டாகியா இருக்குது, அல்லானாணை அல்லாகுத்தஆலா அவரை பாராதூரமாகிய ஒளியாக எடுத்து அடியார்களுடைய (கல்பில்) அவர் பேரில் உகப்பை உண்டாக்கி இருக்கிறான் காபிர்அல்லது முனாபிக்கே ஒளிய அவரை பொருத்தக் குறைவாக இருக்க மாட்டார்களென்று நாகம் சொல்லியது என்று பேசி வருகிறார்கள்.

இன்னும் ஜுனைத்துல்பகுதாதி ஹபல் ஹஸஹூனாதுளி றெளியல்லாகு அன்கு மாபோக்கொத்தவர்களில் அநேக அநேக, அவ்லியாக்களை (ஷிந்திர்) கண்டும், (காபிர்) என்றும், ஹுக்கும் செய்தும் பத்துவாவும் கொடுத்து இருக்கிறார்கள். தொடரும்

## கேள்வி ?

### ஹுலூர் இல்லாமல் தொழுகை கூடுமா ?

இக்கேள்வி கனம். எம், முஹம்மது ஹாஜியார் ஜே. பி. அவர்களால் கேட்கப்பட்டது. உலமாக்க ளடங்கலும் தயைகூர்ந்து இக்கேள்விக்கு விடை பகருமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம்.

தொழுகையில், "ஹுலூர்" என்னும் உள்ளச்சம் இல்லாமல் தொழும் தொழுகை கூடுமா ?

---

**M. M. Abdul Rahaman, Esqr.,**
EDITOR,
DEAR SIR, **"MUSLIM MITHRAN."**

I have duly received your copy No. 5 for which I thank you.

I wish that you will be good enough to put a question in your next issue asking the Ulemas to explain the "**HULOOR**" in our prayer, without which no prayer will be accepted.

Thanking you in anticipation.

Yours truly,
M. Mohamed Hadjiar.
31-1-32.

---


## அறிவித்தல்.

ஆரோக்கியமே சந்தோஷம்!

ஆயுள்வேத வைத்திய சிகாமணி **D. D.** கண்ணங்கார அவர்கள் எவ்விதமான வியாதியையும் சுகப்படுத்தக் கூடியவர். அவருடைய வைத்தியம் முக்கியமாய் நாட்சென்ற வியாதிகளுக்கு மிக சிறந்தது இவர் பண்டையகாலத்திலுள்ள வைத்திய சாஸ்திரிகளுடைய முறைகளை கற்றுணர்ந்த நிபுணர் ஆதலா அவரைல் விசாரித்துப் பாருங்கள். இந்த சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு இலவசமாய் வைத்தியம் செய்து வருகின்றனர்.

இப்படிக்கு,
**D. D.** கண்ணங்கார,
போபஸ் ரோட், கொழும்பு.


## MARADANA MUSLIM ASSOCIATION
## மருதானை முஸ்லிம் சங்கம்.
### 1932.

ஜனவரி 1-ந் உ துவக்கம் 31-ம் உ வரைக்கும் வரவு செலவு கணக்கு.

| | |
|---|---|
| (டீன்ஸ் ரோட்) | |
| S. O. B. S. A. மவுலானா | 50 |
| A. H. ஆரீப் | 1-00 |
| S. முகம்மது அப்துல் காதிர் | 50 |
| P. முகியத்தீன் குட்டி | 25 |
| K. M. கருணை நவீனா | 50 |
| K. P. K. M. அப்பாஸ் | 50 |
| A. M. ஸாலி | 50 |
| S. L. A. மஜீது | 25 |
| A. C. A. மஜீது | 25 |
| O. L. M. மச்ஊது | 50 |
| A. R. M. ஹஸன் | 25 |
| N. சுலைஹா உம்மா | 50 |
| V. K. M. முகம்மது இப்றுஹீம் | 25 |
| S. M முகியத்தீன் அப்துல் காதர் | 25 |
| M. A. பிச்சை | 50 |
| S. S. சின்ன வாப்பு | 50 |
| பூனுன் முகம்மது | 25 |
| வாப்பா சாகிபு (என்) செய்யது இப்றுஹீம் | 50 |
| S. M. முகியத்தீன் பிச் (என்) பிறதர் | 25 |
| N. M. முகியத்தீன் | 50 |
| (ஸிமன்ஸ ரோட்) | |
| K.S.M. முகம்மது இப்றுஹீம் | 25 |
| | 8-75 |

| | |
|---|---|
| முன்பக்கப்படி | 8-75 |
| S. முகம்மது ஹாசிம் | 25 |
| K. அலிகன்னு | 25 |
| O. ஜமீனது | 25 |
| M. L. M. ஜெய்னதீன் | 25 |
| U. L. முகம்மது மரைக்கார் | 25 |
| S. முகம்மது ஹாசிம் | 25 |
| S. A. செய்யது | 25 |
| K. நூர்முகம்மது | 25 |
| முகம்மது ரூசிக் | 25 |
| (போர்டஸ ரோட்) | |
| P. K. முகமது காசிம் | 25 |
| H. V. மாஹூர் | 25 |
| A. R. சுலைமா லெவ்வ | 25 |
| (பே பஸ லேன்) | |
| K. M. சிக்கந்தர் | 25 |
| A. H. . மஜீது | 25 |
| M. கரீம் | 25 |
| W. I M. நூர்தீன் | 25 |
| M. M. K. முகியத்தீன் பக்கீர் | 25 |
| I. L. அப்துல் றகுமான் | 25 |
| I. L. அப்துல் ஹமீத் | 25 |
| A. L. M. ஹாசிம் | 25 |
| A. S. மெய்யான் | 25 |
| நசுர்தீன் உமர் | 50 |
| S. A. ஜெமாலுத்தீன் | 25 |
| M. லத்தோன் | 25 |
| | 15-00 |

| | |
|---|---|
| முன்பக்கப்படி | 15-00 |
| பகர்விரு | 25 |
| ஜெய்ன் மீதின் | 25 |
| M. T. M. சரிபு | 25 |
| N. அப்துல் கரீம் | 25 |
| **(டாலி ரோட்)** | |
| A. மீருசாகிபு | 25 |
| P. N. நாகூர் மீருசாகிப் | 25 |
| A. L. M. சேக்லெவ்வ (கதிபு) | 25 |
| K A. S. ஸெய்யத் அலி | 25 |
| S. K. காதர் மொஹிதீன் | 25 |
| **(ஸ்டபட் பிலேஸ)** | |
| N. M. காஸிம | 25 |
| A. முகம்மது | 25 |
| S. M. ஸலீம் | 50 |
| A. M. இப்ருஹிம் | 25 |
| R. J. மிஸகீன் | 25 |
| P. L. M. முகம்மது லெவ்வ | 25 |
| M. B. காஸிம் | 25 |
| **எவன்டல் ரோட்** | |
| I. A. S. ஹாஜி வாஹித் | 25 |
| **அறப் பிலேஸ்** | |
| I. L. M. அமீர் | 1-25 |
| **(பிசஸ் லேன்)** | |
| R. H. ஆமாத்து | 25 |
| I, M காஸிம் | 50 |
| **(இஸகின்னர் ரோட் ஸவுத்)** | |
| M B. முகம்மது | 50 |
| | 22-00 |

| | |
|---|---|
| முன்பக்கப்படி | 22-00 |
| **(2-ம் மர்தானே)** | |
| K. N. M. கோச் முகம்மது | 25 |
| S. E. O. அப்துல் றஸஸாக் | 25 |
| O. L. ஹஸஸன் | 25 |
| T. B. B. முன்று | 25 |
| K. குப்பகனி | 25 |
| M. L. A. லதீப் | 50 |
| M. அப்துல் றஸஸாக் | 50 |
| S. K, முகம்மது லெவ்வ | 25 |
| பரீதன் (என்) ஸன்ஸ | 25 |
| ஜெகரீய்யா டிறப்பர் ஸடோர் | 25 |
| N. A. A. கரீம் | 25 |
| H. L A. M. நூர்தீன் | 25 |
| A. A. மஜீத் | 25 |
| O. L M. சரீப் | 25 |
| K, சாகுல் ஹமீத் | 25 |
| **(3rd மருதானே)** | |
| A. C. ஆப்புதீன் | 1-00 |
| **(மாலியாகந்த ரோட்)** | |
| K. M. செய்யது இப்ருஹிம் | 25 |
| A, ஸம்சூன் | 25 |
| M. அகுமது | 25 |
| S. L. M யூனுஸ் லெவ்வை | 25 |
| N. S. ஸதியான் | 25 |
| M. I. சேக்பரீத் | 25 |
| M. M கியாது | 25 |
| A. M. M தவ்பீக் | 50 |
| I L. M. உமர்தீன் | 25 |
| S. D ஆப்புதீன் | 25 |
| | 30-00 |



| | |
|---|---|
| முன்பக்கப்படி | 30-00 |
| D. B. பக்கிருன் | 25 |
| காசிம் அலி இஸமாயில் | 25 |
| S. M. மக்மூது | 25 |
| N. M. முகியத்தீன் | 25 |
| S. B. அப்துல் முனுப் | 25 |
| **கிலிப்டன் லேன்** | |
| S. L. M. S. அப்துல் காதர் | 25 |
| O. L. அப்துல் றகீம் | 1-00 |
| **1st மாளிகாகந்தை லேன்** | |
| M ஜெய்லாபுதீன் | 25 |
| T Z. மார்சே | 1-00 |
| M. C. மஃமூது | 25 |
| **2nd மாளிகாகந்தை லேன்** | |
| M. O. ருபான் | 25 |
| M K. H. ருபான் | 25 |
| M. S. M. புகாரி | 25 |
| M. A. சம்சுதீன் | 25 |
| S. R S, செய்யது முகம்மது அலிம் சாகிப் | 25 |
| A. R. உமறு சுலேஹா | 50 |
| இஸ்மாயில்பாய் | 25 |
| I. L. M. M. றெஸீத் | 25 |
| S. L. M. M. ஸாலிஹ | 25 |
| H. M. றஹ்மத்துல்லா | 25 |
| **(பரண வாடி)** | |
| S. L. M. சம்சுதீன் | 25 |
| T, தய்யான் | 25 |
| L. ஹஜ்ஜி | 25 |
| A. M. ஐதுருஸ | 25 |
| | 37-75 |

| | |
|---|---|
| முன்பக்கப்படி | 37-75 |
| C. L. மரைக்கார் | 25 |
| S. ஹஸன் | 50 |
| **(தெமட்டகொடை)** | |
| S. A. K. B. Y. மவ்லானு | 50 |
| A. மெய்தீன் | 25 |
| C. M. M. ஹஸன் | 50 |
| M. T. M. ஹாஷிம் | 25 |
| S. L M. ஹனிபா | 25 |
| Z. A. வதூது | 25 |
| O. L. M. றபீக் | 25 |
| J. E அகம்மது சாகிப் & Co. | 50 |
| K. K. காதர் முஹிதீன் | 25 |
| A. L. M இஸ்மாயில் | 25 |
| M. M. ஸெக்கரியா | 25 |
| C. L. M. ஷமீர் இஸமாயில் | 25 |
| A. B. M. றவ்பு | 25 |
| C. S. A. ஹமீது | 25 |
| M. M அபுஸாலிஹ | 25 |
| M. L. A. வஹாப் | 1-25 |
| I L அஹ்மதுலெவ்வை | 50 |
| N M ஹஸன் | 25 |
| S L M அஹ்மது லெவ்வை | 50 |
| S M அப்துல் அஸிஸ | 25 |
| U A அப்துல்றஸ்ஸாக் | 25 |
| K முகம்மது ஹனிபா | 25 |
| K R இம்றான் | 50 |
| U L அப்துல் லதீப் | 25 |
| P M இப்ருஹிம் | 1-00 |
| **(கொஸ்பல் லேன்)** | |
| S L சுலேமாலெவ்வை | 25 |
| A நாஜர் அலி | 25 |
| | 48-25 |

| | |
|---|---|
| முன்பக்கப்படி | 48-75 |
| (புளோஸ் பெசேஜ்) | |
| C M முகம்மது ஸாலி | 25 |
| (பெரிய மாளியா வத்தை) | |
| M S M முகம்மது ஜிப்ரி | 25 |
| I L M அப்துல் லத்திபு | 25 |
| A R M முக்தார் | 25 |
| M P அப்துல் வாஹித் | 25 |
| T N அப்துல் ஹமீது | 25 |
| S L M சின்னல மரைக்கார் | 25 |
| U அப்துல் கரீம் | 25 |
| A H அப்துல் வஹ்ஹாப் | 25 |
| சின்ன மாளியாவத்தை | |
| A R கரீம் | 25 |
| A C A முத்தலிப் | 50 |
| A M சின்னல மரைக்கார் | 25 |
| W M அப்துல்வாஹித் | 25 |
| P M அப்துல்வாஹித் | 25 |
| S M S தாவுத் | 25 |
| M ஸலீம் | 25 |
| K அப்துல்காதர் | 25 |
| M M ஸாலிம் | 25 |
| கொளும்பு போட் | |
| C L மரைக்கார் பாவா & ஸன் | 10-00 |
| S D M ஹம்தூன் | 25 |
| H M மகீன் | 25 |
| M M ஹுஸைய்ன் | 25 |
| M M லாஹிர் | 25 |
| M I M A | 25 |
| K B M இஸ்மாயில் | 25 |
| | 65-00 |

| | |
|---|---|
| முன்பக்கப்படி | 65-00 |
| (பெஸ்ஸால் இஸ்டிரீட்) | |
| P B உமமச்சி ஹாஜியார் JP | 5-00 |
| மேன் இஸ்டிரீட் | |
| N D H M ஸாலிஹ் | 1-00 |
| A V முகம்மது | 50 |
| D L M முகம்மது | 1-00 |
| S L M பளீல் | 25 |
| S T A வாஹித் | 2-00 |
| A J M ஜெமீல் | 1-00 |
| வெல்டன் டிறப்பரிஸ்டோர் | 1-00 |
| S L M ஹாலிம் | 50 |
| A M H M சரீப் | 1-00 |
| J L M ஆசிம் | 25 |
| J L M அப்துல் அலிஸ | 1-00 |
| O L M ஸஹித் | 50 |
| M L M ஸாலிஹ் | 25 |
| A C H முகம்மது | 50 |
| M H M மன்சூர் | 25 |
| M S முஹ்ஸின் | 50 |
| L M M ஜெவாஹிர் | 1-00 |
| (கய்மன்ஸ் கேட்) | |
| S L H M யூசுப் | 1-00 |
| S L H M ஹஸன் | 25 |
| (கைய்ஸர்ஸ் ஸ்டிரீட்) | |
| உவைஸ் & பிரதர் | 50 |
| சம்சு பிறதர் | 25 |
| M A லதீப் | 50 |
| (சை[illegible] இஸ்டிரீட்) | |
| A C M பாறி | 25 |
| | 86-25 |



| | |
|---|---|
| முன்பக்கப்படி | 86-25 |
| (1-வது குருக்குத் தெரு) | |
| A R M முகம்மது | 50 |
| M L M ஹனிபா | 25 |
| (நொரிஸ் ரோட்) | |
| M H S இஸ்மாயில் | 25 |
| (2nd குருக்குத்தெரு) | |
| S H M ஹனிபா மரைக்கார் | 25 |
| M H M காதர் | 25 |
| M சாகுல் ஹமீத் | 25 |
| பிரின்ஸஸ்டிரீட் பெட்டா) | |
| N செய்யது முஸ்தபா | 25 |
| S M காஸிம் | 25 |
| A R M காஸிம் | 25 |
| M H M தாஹீன் | 50 |
| (3rd குருக்குத் தெரு) | |
| M L மஹ்மூது | 25 |
| Z D M ஜெவாஹிர் | 50 |
| A L M அப்துல் லத்தீப் | 1-00 |
| W M செய்னதீன் | 1 00 |
| L S அப்துல் றகுமான் | 25 |
| முத்தார் & கவ்ஸ | 1-00 |
| A L M அப்துல் றகுமான் | 50 |
| W M H முகம்மது கவ்ஸ | 25 |
| S L M M ஏஹ்யா | 50 |
| V O முஹம்மது அலி | 50 |
| A M அப்துல் மஜீது | 25 |
| Z அகுமது ஹஸன் | 25 |
| சிற்பிறை லேன் | |
| S L M இஸ்மாயில் | 25 |
| | 95-75 |

| | |
|---|---|
| முன்பக்கப்படி | 95-75 |
| கூறுவத் தெரு | |
| M C M அமீர் | 25 |
| (அல்ஸடோப் இஸ்டிரீட்) | |
| A செக்குமுகியத்தீன்கோயா | 1-00 |
| (டேம் ஸடிரீட் பெட்டா) | |
| U L M சரீப் | 25 |
| (மொபன் ஸடிரீட்) | |
| இஸ்மாயில் ஜெய்னுல்ஆபுதீன் | 25 |
| (ஸந்தபஸதியன் இஸடிரீட்) | |
| A M M சாலி | 1-00 |
| (வில்சன்ஸடிரீட் புதுக்கடை) | |
| A மதார்சா | 25 |
| (பெரிஸடிரீட் புதுக்கடை) | |
| A T H M நூற்தீன் | 50 |
| M M A அபூபக்கர் | 50 |
| பிரின்ஸஸ்கேட் | |
| S K M கனி | 25 |
| சில்வர்ஸிமித் ஸடிரீட் | |
| S பாச்சா | 1-00 |
| கிறேன்பாஸ ரோட் | |
| (லேயார்ஸ புருட்வே) | |
| அன்ஸாரி | 50 |
| M H M தாஹா | 25 |
| V R முகம்மது கனி | 1-00 |
| ஸன்ஜோசப் இஸ்டிரீட்) | |
| S அப்துல் றகுமான் | 75 |
| W M H அப்துல் ஜெப்பார் | 25 |
| | 103-00 |

| | |
|---|---|
| முன்பக்கப்படி | 103--75 |
| **(அலுக்மாவத்தை)** | |
| A C M ருஷிக் | 50 |
| **(பிரின்ஸாப் எவினு)** | |
| S L அஹமது லெவ்வை | 25 |
| **வெள்ளவத்தை** | |
| M I M ருமிஸ | 50 |
| A R A ருஷிக் (M M C) | 1·00 |
| A L M சரீப் | 50 |
| I L M அப்துல் மஜீத் | 50 |
| **(சின்னமன் கார்டன்)** | |
| S L M H ஜைதருஸ | 50 |
| N M பிச்ச | 25 |
| **(கும்பனித் தெரு)** | |
| A H சுலைமான் (கல்ஹூகம்பேனி) | 50 |
| **(கிளிபோட் கிறஸன்)** | |
| M M அப்துல்றகுமான் | 25 |
| **(பிளோஸ ரோட் ஜாவத்தை)** | |
| A L M ஹனிபா | 25 |
| | 108--00 |


| | |
|---|---|
| முன்பக்கப்படி | 108-75 |
| **(பான்ஸ பிலேஜ்)** | |
| A M ஹாமித் | 1-00 |
| A முகம்மது சரீப் | 25 |
| M A M இஸ்மாயில் | 1-00 |
| **(பொறலை கனத்தைரோட்)** | |
| S L M மெய்தீன் ஹாஜியார் | 50 |
| **(பழையசோனகத் தெரு)** | |
| A L அப்துல் றஹுமான் | 25 |
| **(புதியசோனகத் தெரு)** | |
| M C M யூசுப் | 25 |
| A B C M மெய்தீன் | 25 |
| **(மெஸன்ஜர் ஸ்டிரீட்)** | |
| S L M மீலமரைக்கார் | 25 |
| I L M ஹனிபா | 25 |
| M I M ஹாஜிநயின் | 50 |
| A L M ஹனிபா | 50 |
| **(கொறி ரோட்)** | |
| M M சேறமலி | 25 |
| M C A ஹஸன் & A L M அமீன் | ...1-00 |
| | 115--00 |



# MARADANA MUSLIM ASSOCIATION COLOMBO.

## 1932 ஆம் ஜனவரி மீ 1-ந் உ முதல் 31-ந் உ வரையில் மருதானை முஸ்லிம் சங்கத்தின் வரவு சிலவு கணக்குகள்.

| | | ரூ. ச |
|---|---|---|
| பில் வரவு | 115—00 | |
| முன் இருப்பு | 29—34 | |
| பில் அறவிடும் விஷயமாக கொமிஷன் | | 24—35 |
| கிலிபோட் பிரஸ் டிசம்பர்மாதப் பத்திரிகையுடன் கணக்கு முடித்தது | | 33—00 |
| டைமன் பிரஸ் ஜனவரி பேப்பர் அச்சிட அட்வான்ஸ் | | 10—00 |
| சிக்காளிக்கு மருந்து வாங்கிக் கொடுத்த வகையில் சிலவு | | 2—56 |
| சிக்காளியை தன் சொந்த ஊருக்கு அனுப்ப ரெயில் கூலியும் வழிச் சிலவும் சேர்ந்து | | 2—00 |
| மய்யத்து விஷயமாய் சிலவு | | 8—50 |
| சங்கத்தின் வீட்டு வாடகையின் பேரால் | | 10—00 |
| கிலிபோட் பிரசில் அச்சிட்ட பேப்பரை டைமன் பிரசில் அச்சிடும்படி ரிஜிஸ்ட் மாத்துகிறதற்கு முத்திரை சிலவுடன். சிலவு | | 3—06 |
| மெஸன்ஜர் ஸ்டிரீட்டில் ஓர் மையத்தைப்பற்றி அறிவிக்கப் பட்டதின் நிமித்தம் போகவர சிலவு | | 50 |
| பேப்பர் அனுப்ப முத்திரை சிலவு | | 1—05 |
| அச்சுக்கந்தோருக்கு போகவர சிலவு | | 80 |
| $2\frac{1}{3}$ டசின் புல்ஸ்கேப் பேப்பருக்கு சிலவு | | 43 |
| கை பேக் 1 க்கு சிலவு | | 1—00 |
| பியுனுக்கு 1 சூட் உடுப்பு தைக்க சிலவு | | 10—00 |
| பியுனுக்கு பெச் 1 க்கு சிலவு | | 3—00 |
| கிளார்க்கின் சம்பளம் | | 6—00 |
| ஆக வரவு சிலவு | 144—34. | 116—25 |
| | 116—25 | |
| சிலவு நீக்கி இருப்பு | 28—09 | |



புகாரிமஸ்ஜித் போபஹலேன் மருதானை கொழும்பு.

மகாகனம் தங்கிய காரணக் கடலாகிய, பூரணவடிவாகிய, அல்கு த்பு செய்யிது முகம்மதுப் ஜெலாலியாயுல், புஹாரிய்யுல் காதிரிய்யுல், கன்னூரி, குத்திஸ்ஸவீர் ரஹ நாயகத்தின் பேரால், வருடாந்தம், நடைபெற்று வருவதுபோல், இவ்வருடம் (23-வ ) முஹர 21-ந் வ நாயத்துக்கிழமை பின்னேரம் 8-30 மணி அலவில் மஹக்கிபு ஒதி முடி ந்ததின் பின் மேல் சொல்லிய நாயகத்தின், திரு 5-ந்தாம் பேரர், அல் ஆலிமுல் பாலில், செய்குல் காமில் எப்ன றஸ ஹுல்லாஹி செய்யிது முகம்மதுல் ஜெலாலிய்யுல், புஹாரிய்யுல் புஸ்தானியில், காதிரிமவ்லானு அவர்களால் அறபி வாக்கியத்தால் உபதேசம் சொல்லப்பட்டதை கனம் ஹக்கிம் ஹாஜி மீருலெவ்வை, சேக் அப்துர் றஹுமான் ஆலிம்ஸா ஹிப் (கலீபத்துல் அலவிய்யா) அவர்களால் தமிழ் வாக்கியமாக மொழி பெயர்க்கப்பட்டது.

அதாவது, தக்குவாவை பற்றியும், முஸ்லிம்களின் ஒற்றுமையைப்பற்றியும், சலவாத்தைப்பற்றியும், சொல் லப்பட்டது. அம் மஜ்லிசுக்கு ஸாதாத்துமார்களும் உலமாக்களும் கதீபுமார்களும் இன்னும் கனதனவான்களும், பெரும் திரளாக சமுகம் கொடுத்து 9 மணி அலவில் விருந்தளிக்கப்பட்டது. ப. பர்.

2—2—32.

WELLAWATTE STORES,

WELLAWATTE.

*High Class Artistic, Picture Framing Specialists.*

---

*Every Picture sent out is well finished and hermatically sealed.*

---

*Picture framers to all the leading Artists in Colombo*

CHARGES MODERATE

Phome 4039

WORKMANSHIP GUARANTEED.

ரு ரூ

FASHION HOUSE

# RAZEENA

Nos. 11, 13
DEAN'S ROAD
MARADANA

COLOMBO.

# රසීනා හවුස

நூதனமான பட்டுப்பிடவைத் திணுசுகளும், வயில் திணுசுகளும், லேஸ் திணுசுகளும், பழையகாட்டு சாரம், கோட்டுப் பிடவை, கமிசை பிடவை, நல்லமாதிரி கமிசைகளும் எங்களிடத்தில் விலை சகாயமாக விற்கப்படும்,

நெ. 11, 13, டீன்ஸ்ரோட் மருதானை, கொழும்பு.


---


Printed at the Diamond Press, 59, Sea Street and Published by M M Abdul Rahman, Maradana Muslim Association, 84, Dean's Road, Colombo.